00007

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 5

**SNU 5336 –** விசேட தேவைகள் சார் கல்வியின் கல்வித் தத்துவ அடிப்படைகள்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 21.10.2023 நேரம்: மு.ப. 01.30 - மு.ப 04.30

பகுதி **I** இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் மாத்திரம் விடை தருக.

## பகுதி – I

1. உங்கள் சொந்த மொழிநடையில் விசேட கல்வி எனும் எண்ணக்கருவை விளக்குக.

2. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித் தத்துவத்தின் மீதான ஆற்றலின் முக்கியத்துவங்கள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

3. இயலாமையுடைய பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கு ஆதரவளித்த ஐந்து (05) ஐக்கிய நாடுகள் (UN) அமைப்பின் பிரகடனம் மற்றும் மாநாடுகளை குறிப்பிடுக.

4. விசேட தேவைகள் சார் கல்வியின் நோக்கங்களைப் பட்டியற்படுத்துக.

5. தாராளமயவாதிகளின் முன் நோக்குகளுக்கேற்ப கல்வியின் பிரதான செயல்பாடுகளை உதாரணங்களை மேற்கோள் காட்டி விளக்குக.

6. "கல்வி குழந்தையை சுதந்திரமாகவும் சுயாதீனமானவர்களாகவும் மாற்ற வேண்டும்" – மகாத்மா காந்தி
கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் விருத்திக்கு ஏற்ப மேலே குறிப்பிட்டுள்ள கூற்றினை விளக்குக.

7. சாதாரண கல்வி முறைமையில் விசேட கல்வித் தேவைகளுடைய மாணவர்களின் ஒருங்கிணைப்பு என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.

8. "உள்ளடங்கற் கல்வி ஒரு குழு அணுகுமுறை என விவரிக்கப்படுகிறது"
மேலே குறிப்பிட்டுள்ள கூற்றை சுருக்கமாக நியாயப்படுத்துக.

**(5 x 8 = 40** புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. பிளாட்டோ அறிமுகப்படுத்திய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

ii. வகுப்பறையில் பல்வகைப்பட்ட தேவைகளைக் கொண்ட மாணவர்களுடன் தொடர்புடைய வகையில் ஜீன் ஜக் ரூசோ (Jean Jacques Rousseau) முன்வைத்த கல்விக் கொள்கைகளை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

iii. ஜீன் ஜக் ரூசோவால் (Jean Jacques Rousseau) முன்வைக்கப்பட்ட, நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள கொள்கைகளை உள்ளடங்கல் வகுப்பறையில் பல்வகைத் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை உதாரணங்களை மேற்கோள் காட்டி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10.

i. ராவ் மற்றும் பலர் (2004) முன்வைத்த விசேட தேவைகள் சார் கல்வியின் ஏழு (07) கோட்பாடுகளை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

ii. மேற்கூறிய விசேட தேவைகள் சார் கல்வியின் கோட்பாடுகளை இலங்கைக் கல்வி முறைமையில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்களை உதாரணத்துடன் ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

iii. மேலே குறிப்பிடப்பட்ட சவால்களை வெற்றிகொள்ள மேற்கொள்ளக்கூடிய நான்கு (04) நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும்.

**(08 புள்ளிகள்)**

11.

i. இலங்கையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் தொழிற்கல்வி நடைமுறைகளின் முக்கியத்துவத்தை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

ii. மகாத்மா காந்தி மற்றும் கார்ல் மார்க்ஸ் ஆகியோரால் முன்மொழியப்பட்ட கல்விக் கொள்கைகளை விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் தொழிற்கல்வி நடைமுறைகளுடன் தொடர்புபடுத்தி ஒப்பிட்டு ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

iii. இலங்கைச் சூழலில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் தொழிற்கல்வியை மேம்படுத்த மகாத்மா காந்தி மற்றும் கார்ல் மார்க்ஸ் ஆகியோர் முன்மொழிந்த கொள்கைகளை நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்?

**(08 புள்ளிகள்)**

12.

i. விசேட பாடசாலைக் கல்வி எனும் எண்ணக்கருவை உங்கள் சொந்த மொழிநடையில் வரைவிலக்கணப்படுத்துக.

(04 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்குக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பங்கின் முக்கியத்துவத்தை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. இலங்கைச் சூழலில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட தமது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் பெற்றோர்களும் குடும்ப அங்கத்தவர்களும் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை என்பதைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

i. விழுமியக் கல்வி என்பதால் நீர் கருதுவது யாது?

(05 புள்ளிகள்)

ii. "விசேட கல்வித் தேவைகள் இல்லாத சாதாரண மாணவர்களைக் காட்டிலும் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களைக் கையாளும் போது விழுமியம் மிகவும் முக்கியமான விடயமாகின்றது"

மேலே குறிப்பிட்ட கூற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

(06 புள்ளிகள்)

iii. நீங்கள் ஓர் உள்ளடங்கல் வகுப்பு ஆசிரியராக, இலங்கையில் உள்ளடங்கற் கல்வித் துறைக்கான பங்குதாரர்களிடையே விழுமிய நடத்தைகளை மேம்படுத்த எவ்வகையான உத்திகளைக் கையாள்வீர்.

(09 புள்ளிகள்)

14.

i. ஒரு நாட்டில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான தேசிய அளவிலான நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. இலங்கையில் முறையான கல்வியைப் பெறுவதில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை உதாரணங்களை முன்வைத்து விவரிக்குக.

(07 புள்ளிகள்)

iii. இலங்கையில் இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்கு முறையான கல்வியைப் பெறுவதற்கான அணுகளவை மேம்படுத்த சில உத்திகளை பரிந்துரைக்குக.

(08 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -